## 7 ஆம் வகுப்பு - பருவம் 1 - பாடம் 1

## 1. வட இந்திய அரசுகள் - இராசபுத்திரர்கள்

1] காலத்தின் அடிப்படையில் வரலாற்றின் பிரிவுகள் யாவை?

பண்டைய காலம், இடைக்காலம் மற்றும் நவீன காலம்

2] இடைக்காலம் - கி.பி 8ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 18 ஆம் நூற்றாண்டு

முந்தய இடைக்காலம் - கி.பி 8ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 13 ஆம் நூற்றாண்டு

பிந்தைய இடைக்காலம் - கி.பி 13ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 18 ஆம் நூற்றாண்டு

3] ராஜபுத்திரர்கள் காலம் - ( கி.பி 647 - கி.பி 1200 )

4] இராமன் - சூரியகுலம்

கிருஷ்ணன் - சந்திர குலம்

5] எத்தனை வகை ராஜபுத்திரர்கள் ஆட்சி செய்தார்கள்?

36 வகை

6] குறிப்பிடத் தகுந்த இராசபுத்திரர்கள் யாவர்?

பிரதிகாரர்கள் , பாலர்கள், சௌகான்கள், தோமர்கள், சந்தேலர்கள், பரமாரர்கள்

7] பிரதிகாரர்கள் - கி.பி 8 - 11 நூற்றாண்டுகள்

8] பிரதிகாரர்கள் - கூர் ஜன மரபினர்

9] பிரதிகார மரபைத் தோற்றுவித்தவர் - முதலாம் நாகபட்டர் (கிபி 725 - 740)

10] பிரதிகார மன்னர்களில் மிகவும் வலிமையுடன் விளங்கியவர் யார்?

மிகிரபோசர்

11] மிகிரபோசரின் மகன் - மகேந்திர பாலர்

12] பிரதிகாரர்களின் கடைசி மன்னர் யார் ?

ராஜ்ய பாலா

13] பாலர்கள் - கிபி 8 - 12ஆம் நூற்றாண்டு

கோபாலர் (கிபி 765 - கிபி 769)

கோபாலரின் மகன் - தரும பாலர் (கிபி 769 - கிபி 815)

14] பாலர் மரபின் கடைசி மன்னர் - கோவிந்த பாலர்

15] கனோஜ் பகுதியில் இருந்த பிரதிகாரர்களுக்கு திறை செலுத்திய அரசுகள் யாவை?

தோமர்கள், சௌகான்கள்

16] சௌகான் மன்னர்களில் மிக முக்கியமான மன்னர் யார்?

பிரிதிவிராஜ் சௌகான்

17] பரமாரர்கள் தலைநகர் - தாரா

18] தாராவில் சம்ஸ்கிருத கல்லூரியை நிறுவியவர் - ராஜாபோஜ்

19] இராசபுத்திரர் கால சிறப்பு படைப்புகள் யாவை?

கல்ஹணர் எழுதிய ராஜதரங்கிணி

ஜெயதேவரின் கீதா கோவிந்தம்

சோமதேவரின் கதா சரித சாகரம்

20] பிரிதிவிராஜனின் படையெடுப்புகளை பற்றி விளக்கும் நூல் - பிரிதிவிராஜசோ